திரு. எஸ். வடிவேல்: தலைவரவர்களே, நாட்டினுடைய அடிப்படைத் தொழில் உழவுத்தொழில். அந்தத் தொழிலுக்கு மிகக்குறைந்த கூலியிருக்கிறது. எனவே இந்தக் கூலிச் சட்டத்தையாவது தமிழகம் பூராவிற்கும் விஸ்தரிக்க நம் அரசு உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தற்சமயம் இல்லை.

Smuggling of wheat

* 517 *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether there is smuggling of wheat from our State to other neighbouring States; and

(*b*) if so, the action taken by this Government to curb the same?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) 1969-ஆம் ஆண்டு மண்டலங்களுக்கிடையில் கோதுமை—கோதுமைப் பொருட்கள் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு ஆணையின்கீழ், தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், மைசூர், கேரள மாநிலங்கள், மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதியாகிய புதுச்சேரி ஆகியவற்றுக்குள் கோதுமையையும், கோதுமைப் பொருட்களையும் அனுப்புவதில் கட்டுப்பாடு எதுவும் இல்லை. எனவே, அவ்வாறு கோதுமையை அனுப்புவது தொடர்பாக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டியதில்லை.

DR. H. V. HANDE: In general will it be possible for this Government to prevent smuggling of foodstuffs like rice from this State to the neighbouring States? Even recently in Pattabiram one Station Master and one Deputy Station Master were arrested. Will it be possible for the Government to give instructions to the Railways people also to see that whenever wagons are loaded, immediately information is given to the Government, so that the Government can immediately intervene and take necessary action. Even with regard to broken rice this took place and two persons, I understand, are kept under suspension May I know whether it is possible for the Government to keep a vigilance and watch over these things and take immediate action?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இதுபோன்ற வழக்கு சம்பந்தமாக 4 மாதங்களுக்கு முன்பு நடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் குறிப்பிட்டிருக்கிறேன். அது தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது வெளிமாநிலங்களுக்கு அரிசி அனுப்பக்கூடாது என்ற தடையிருப்பதால் எல்லா இரயில்வே அதிகாரிகளுக்கும் எந்தக் காரணத்தைக்கொண்டும் ரயில்வே வேகன்களில் அரிசியை ஏற்றக்கூடாது என்று தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது. ஏற்றுவதில்லை என்ற தகவலைத் தெரிவித்திருக்கின்றார்கள். எனவே, அப்படிப்பட்ட தகவல் ஏதேனும் கிடைத்தால் அங்கத்தினர் தெரிவிக்கலாம்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, சதர்ன் பகுதிகளில் கோதுமைப் பொருட்களை அனுப்புவதில் எந்தவிதமான தடையும் இல்லை என்று கூறினார்கள். பஞ்சம் வந்த நேரத்தில் மற்ற மாநிலங்களை விட நம்முடைய மாநிலத்தில்

கோதுமை குறைவாகக் கிடைத்தது. அப்படிப்பட்ட நேரங்களில் குறைவாகக் கொடுக்கப்பட்ட கோதுமையையாவது மற்ற மாநிலங்களுக்குப் போகாமல் இருக்கும்படி கண்காணிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, தற்சமயம் அந்த நிலைமை இல்லை.

Textool company at Coimbatore

* 518 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to take over the Textool company in Coimbatore; and,

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) கோயம்புத்தூர், டெக்ஸ்டூல் கம்பெனியை மீண்டும் இயங்கச் செய்யும் பொருட்டு இயக்குநர்கள் வாரிய இசைவுடன் அந்த நிறுவனத்தின் நிர்வாகத்தை அரசு மேற்கொண்டுள்ளது. இந்த நிறுவனத்தின் இயக்குநர்கள் வாரியம் அரசின் முதுநிலை அதிகாரி ஒருவரது தலைமையின்கீழ் அரசால் மாற்றியமைக்கப்பட்டது. தமிழ்நாடு 1969-ம் ஆண்டு துயர் தணிப்பு (தனி விதித்துறைகள்) நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் இந்த நிறுவனத்தை 13—8—1972 வரை ஒரு துயர்தணிப்பு நிறுவனமாகவும் அரசு அறிவித்துள்ளது. மேலும், இந்நிறுவனம் வங்கிக்கடன்கள் நீங்கலாக ஒரு தரப்பாக உள்ள ஒப்பந்தங்கள், சொத்தின் மீதான ஈட்டுறுதிகள், உடன்படிக்கைகள் ஏனைய ஆவணங்கள் முதலிய யாவும் அவற்றின்கீழ் சேர்ந்து வரும் அல்லது எழுகிற உரிமைகள், சிறப்புரிமைகள், கடமைகள், பொறுப்புக்கள் முதலிய யாவற்றின் செய்திறனையும் அரசு நிறுத்தி வைத்துள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் அரசு இந்த நிறுவனத்துக்கு நிதி உதவி வழங்கியுள்ளது. அது இப்போது நன்கு செயல்பட்டு ஆதாயத்தில் இயங்கி வருகின்றது.

திரு. ச. சங்குமுத்து தேவர்: தலைவரவர்களே, இதற்கு நிதி உதவி அளித்ததாக அமைச்சரவர்கள் கூறினர்கள். இது லோனுகக் கொடுக்கப்பட்டதா அல்லது சப்சிடியாக வழங்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நாம் பேங்க் கியாரண்டி மூலம் பண உதவி செய்து வருகிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், டெக்ஸ்டூல் கம்பெனி திறந்த பிறகு ஆதாயத்தில் நடக்கின்றது. ஆகவே, ஏற்கனவே தொழிலாளர்களிடமிருந்து பிடிக்கப்பட்ட பணத்தை மற்ற மில் தொழிலாளர்களுக்கு கோவையிலே கொடுப்பதைப்போன்று கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ்நாடு இண்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பொரேஷன் பணம் கொடுத்திருக்கிறது. நாம் கியாரண்டி கொடுக்கிறோம். ஒவ்வொரு ஆண்டிலும் நிறுவனத்தின் கணக்கைப்பார்த்து இதுபோன்று திருப்பிக் கொடுக்க வாய்ப்பிருந்தால் தொழிலாளர்களுக்குத் திருப்பிக் கொடுக்கும்படி முடிவு எடுக்கப்படுகிறது.